# கிளிநொச்சியில் உணவு நிலைமை மோசமாகிறது

கிளிநொச்சி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து இருப்பதால் அங்குள்ள உணவு நிலைமை மிக மோசமாய் இருப்பதாக கிளிநொச்சியிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை முறையாக வழங்கமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இம் மாவட்டத்துக்கு தரைமார்க்கமாகப் பொருள்களை எடுத்து வர இராணுவத்தினரின் கெடுபிடிகள் தடையாக இருக்கின்றன கிளிநொச்சி மாவட்டத்துக்கு வலைப்பாட்டுத் துறைமுகத்தின் ஊடாகக் கப்பல் மூலம் பொருள்களை குறைவாகவே அரசாங்கம் அனுப்பிவந்தது மேலும் கப்பல்களை இங்கு அனுப்புவதாகக் கொழும்பில் அரச அதிகாரிகள் அறிவித்த போதிலும் இம் மாவட்டத்துக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்களை அனுப்ப அரசுபின் நிற்கிறது. ஏற்கனவே திருகோணமலை, வவுனியாம் பகுதிகளிலிருந்தும் தீவுப் பகுதிகளிலி

— 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4 - 50

முரசொலி

முரசு 05 ஒலி 239 பிரசோற்பத்தி ஆடி 09 (25 - 07 - 1991) வியாழன்

# இறுதிக் கட்ட நகர்வுக்கு தயாராகின்றனராம்!

## படையினர் உணவு மற்றும் ஆயுதங்களை சேகரிப்பதில் ஈடுபடுவதாகத் தகவல்

**ஆனையிறவை நோக்கி வந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் ஊடறுத்து நடாத்திய அதிரடித்தாக்குதலையடுத்துக் கடந்த இரு தினங்களாக அப்படையணி மேற்கொண்டும் இதுவரை எந்தநகர்வையும் மேற்கொள்ளாது அவ்விடத்திலேயே தங்கியுள்ளது.**

இதேவேளை தாம் ஆனையிறவை நோக்கி நகர இறுதிக்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முகாமை நோக்கி இறுதி நகர்வுக்காக மேலதிகமாகப் படைகளைச் சேர்த்துக்கொள்வதாகவும் ஆயுதங்கள் மற்றும் உணவுக் கையிருப்பை அதிரப் படுத்தி வருவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

படையினர் ஆனையிறவு முகாமுக்கு கூப்பிடு தொலைவில் இருப்பதாக அரசசார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி ஊரடங்கு தொடரும்

கிளிநொச்சி மாவட்டம், மற்றும்புதுக்குடியிருப்பு, சாவகச்சேரி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் என்பவை தவிர்ந்த ஏனைய வடபகுதி இடங்களில் இன்று காலை முதல் ஊடரங்குச் சட்டம் நீக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

# பாலம் பணிமனை அழைப்பு

போராளிகளைப் பராமரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 4 மணிக்கு 'பாலம்'பணிமனை ஆலோசனை மண்டபத்தில் நடைபெறும்.

வலிகாமப் பிரிவுகளிலுள்ள சகல பாடசாலைகளின் க. பொ. த சாதாரண மற்றும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# தென்மராட்சியில் மாவீரர்களுக்கு அஞ்சலி

கட்டைக்காட்டில் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீரமரணத்தைத்தழுவிக்கொண்ட வீரவேங்கைகளான சங்கன் சுப்பிரமணியம் கருணாநிதி-எழுதுமட்டுவாள், அல்விட் (சிவபாலன் கருணாகரன்-மட்டக்களப்பு), நளின் (சச்சிதானந்தம் நிர்மலன்- கல்முனை), ஜெயா (செல்லையா நடராசா- மட்டக்களப்பு) ஆகியோரது புகழுடல்கள் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது பின்னர் இந்த மாவீரர்களின் புகழுடல்கள் புலிகளின் இராணுவ அணி

— 04 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு உல்லாச விடுதியில் மேலும் சில ஆயுதங்கள் மீட்பு

ஆனையிறவு உல்லாசவிடுதியிலிருந்து கடந்த 21 ஆம் திகதி மேலும் சில ஆயுதங்களை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர்.

60 எம். எம் ஷெல் - 2, ஆர். பி ஜி ஷெல் - 2, 40 எம் எம் ஷெல் - 2, ரி- 56 ரவைக் கூடுகள் - 10, ஜே. ஆர் குண்டு - 2, ஐ. எம் ரவைகள் - 910 என்பனவும் அழுகிய நிலையில் படையினரின் 3 சடலங்களும் புலிகளால் மீட்டெடுக்கப்பட்டன.

# ஆழியவளை நோக்கி படையினர் ஷெல் தாக்கு

வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினர் நேற்று இரவு ஆழியவளை, உடுத்துறைப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்

இதன் காரணமாக அப்பகுதியில் உள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# பயன் தரும் மரங்கள் குண்டு வீச்சால் முறிந்தன

கடந்த ஒரு வாரமாக வடமராட்சி கிழக்குப்பகுதியில் படையினர் நடாத்திய விமானக்குண்டு வீச்சுத்தாக்குதல்களால் ஆயிரக்கணக்கான பயன்தரும் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

பின்தங்கிய பகுதியான இங்கு மக்களின் வருவாய்க்கு உதவும் தென்னை, பனை, மா, பலா போன்ற மரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன

அநேகமானதென்னை மரங்கள்குலைகளுடன் முறிந்து காணப்படுகின்றன

நூற்றுக்கும் மேற்பட்ட விடுகளும் சேதமடைந்துள்ளன. (79)

# பச்சிலைப்பள்ளியில் பன்னிரண்டு வீடுகள் சேதம்

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய நாள்களில் இயக்கச்சி, சங்கத்தார் வயல், கோயில் வயல் பகுதிகளில் வை-12 விமானம் மிகமோசமான குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டதில் பன்னிரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதனால் பெருமளவு தென்னை மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

—04ஆம் பக்கம் பார்க்க

# இரு முனை யுத்தத்தில் 250 க்கும் மேற்பட்ட படை பலி முந்நூறு புலிகள் வீரமரணம்

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான கடந்த 15 நாள் முற்றுகைப் போரிலும் கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து ஆனையிறவு முகாம் நோக்கி நகர முற்படும் இராணுவப் படையணியுடனான கடந்த,10 நாள் சண்டையிலும் பல இராணுவ உயரதிகாரிகள் உட்பட 250 க்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போரில் பெண் போராளிகள் உட்பட 300 புலிவீரர்கள் வீரமரணமடைந்துள்ளனர்

ஆனையிறவு முகாம்

—04ஆம் பக்கம் பார்க்க

# 29 சடலங்கள் ஒப்படைப்பு செய்தி நிறுவனம் முக்கியத்துவம்

நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீண்டும் நடைபெற்ற மோதலில் 12 படையினர் பலியானதாகவும் 13 சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் 25 பேரைக் காணவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை புலிகளால் கைப்பற்றப்பட்ட 29 இரா

—04ஆம் பக்கம் பார்க்க

# விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

# சிற்றுண்டிகள் போதியளவு கையிருப்பில் உள்ளன

போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு ஊட்டச்சத்துள்ளதும் சுவையானதுமான சிற்றுண்டிகள் கைவசம் அதிகமாக இருப்பதால் அவற்றை வழங்கவேண்டாம் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது

இது தொடர்பாக இதற்கு முன்னரும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டும் சிலர் இவற்றைக் கொண்டுவந்து தருவதால் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது

எனவே சிற்றுண்டி வகைகள் தருவதைத்தற்காலிகமாக நிறுத்தி குறுகியகால அறிவித்தலின் பேரில் மீண்டும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# இரு உளவாளிகள் புலிகளிடம் சிக்கினர்

தென்மராட்சிப்பகுதியிலும் ஆனையிறவு முகாம் பகுதியிலும் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இரு உளவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்மராட்சியில் புலிகளின் போர்க்கால நடவடிக்கைகள் குறித்து உளவு பார்த்த நபரும், ஆனையிறவில் புலிகளுக்கான காவலரண் அமைப்பதில் உதவுவதாக நடமாடிய நபர் ஒருவருமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

# நிலாவெளி கிளைமர் தாக்கு இரண்டு சிப்பாய்கள் பலி

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கிளைமர் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை நிலாவெளி உல்லாசப் பயணிகள் விடுதியில் இருந்து படையினர் வெளியேறினர் விடுதியிலி

—04ஆம் பக்கம் பார்க்க

## ணுகுண்டு 3-வது முறையுமா?

ஜப்பானில் ஹிரோஷிமா, நாகசாக்கிஆகிய நகரங்கள் மீது 2 அணுகுண்டுகளை அமெரிக்கா 1942 இல் வீசிய போது லட்சக்கணக்கான மக்கள் மடிந்தனர் என்பது மறக்கமுடியாத சரித்திர நிகழ்ச்சி.

அதன் பின்னர் மூன்றாவது அணுகுண்டு வேறெங்கும் வீசப்படவில்லை என்றுதான் நாம் எல்லோரும் இது வரை காலமும் நம்பிவந்தோம். அது தவறு: 1954 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ரஷ்யாவின் தெற்கும் பகுதியில் நடத்தப்பட்ட யுத்த ஒத்திகையின்போது மூன்றாவது அணுகுண்டு போர் விமானத்தில் இருந்து வீசப்பட்டது என்ற உண்மை 36 ஆண்டுகளின்பின் உலகிற்கு தெரியவந்துள்ளது.

இந்த உண்மையை ஓய்வுபெற்ற ரஷ்ய இராணுவ ஜெனரல் ஒருவர் தெரிவித்தார் என்றும் அதனை 1654 ல் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு டிக்கானின் ஊர்சிதம் செய்தார் என்றும், மாஸ்கோவின் இருந்து வெளியாகும் 'ஹட்டார்' என்ற இராணுவச் சஞ்சிகை அதன் 1990ஆம் ஆண்டு செப்டம் மாதம் 29 ஆம் திகதி பதிப்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அணுகுண்டு தாக்குதலின் போது ஏற்படும் நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றி செயல்பூர்வமாக அறிந்து கொள்ளவே இந்த அணுகுண்டு வீசப்பட்டதென்றும், அப்போது இடம்பெற்ற உயிர் சேதங்கள்பற்றிய விவரம் இற்றைவரையில் வெளியிடப்படவில்லை என்றும், ஆனால் அணுகுண்டு விழுந்து வெடித்த பிரதேசம் அடையாளமே தெரியாதபடி அழிந்து விட்டது என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (16)

## நம் பொருளாதாரம் பெருக நாம் அயராது உழைப்போம்

உருளைக்கிழங்கை எங்கள் மத்தியில் அறிமுகம் செய்தவர்கள், அது ஐரோப்பிய நாடுகளிலேதான் விளையும் என்று கூறி, சைப்பிரஸ் முதலாய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தந்தனர். இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன்பின்னாக யுத்த நெருக்கடிக் காலத்தில் உருளைக்கிழங்கு வற்றல் வரவழைத்துத் தந்தார்கள்.

திராட்சை மத்திய தரைக்கடல் நாடுகளிலும் அவுஸ்திரேலியாவிலும் மாத்திரம் உண்டாகும் என்று கூறி அதனைப் பெட்டி பெட்டியாக மரத்தூள் மத்தியில் பக்குவமாக இறக்குமதி செய்து தந்தார்கள். இங்ஙனமே அப்பிள் பழத்தையும் இங்கே விளையாது என்று கூறி இருட்டடிப்புச் செய்தார்கள்.

எங்கள் ஊர்கள் தோறும் உள்ள குளங்களைத் தூரவிட்டு அவற்றைத் தோண்டுவோர், குளப்பொருக்கு எடுப்போர் தண்டனைக்குள்ளாவர் என்று பிரசித்தமும் செய்து, சொந்த வேளாண்மையைக் கட்டுப்படுத்தி, இறக்குமதியை ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தார்கள்.

இன்று ஆதாரமற்ற கதைகளும் கட்டுப்பாடுகளும் தவிடுபொடியாக, நம்மவர் சொந்த முறையில் உருளைக்கிழங்கு திராட்சை முதலியனஉற்பத்தி செய்கிறார்கள்.

முயற்சி திருவினையாக்கும் என்றுஉலகத்துக்குக் காட்டியவரும்,காட்டுபவரும் தமிழரே. தமிழா தலை நிமிர்ந்து பொருளாதார வழியைத் தேடு. பனையை நம்பு. மரங்களை நடு. விளைவைப்பெருக்கக் குளங்களை ஆளமாக்கு, வீட்டுத் தோட்டத்தை விருத்தி செய். முயற்சி திரு. வினையாக்கும். ஓரங்குல நிலத்தையும் வீணாகக்கிடக்க விடாதே. (மில்க்வைற்செய்தி)

## தொண்டர் நிறுவனங்கள் உலர் உணவு விநியோகம்

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குத் தொண்டர் நிறுவனங்கள் உலர் உணவு வகைகளை வழங்கிவருகின்றன

இவ்வகதிகளுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், செஞ்சிலுவைச் சங்கம் குடும்ப உறுப்பினர் தொகைக்கேற்ப உலர் உணவு வழங்கி வருகின்றன.

இதேவேளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் 'அ' 'இ' அட்டைகள் உள்ள குடும்பங்களுக்கு ஒருவார இலவச நிவாரணமும் 'உ' அட்டைகள் உள்ளவர்களுக்குப் பணத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றன. (38)

## உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் அம்பனுக்கு இடமாற்றம்

ஆனையிறவு முகாம் தாக்குதல், கட்டைக்காடு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மருதன்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்பன அம்பன் கிராமத்திற்கு இடம் மாற்றப்பட்டு ஊழியர்களும் அங்கிருந்தே வேலை செய்கின்றனர்.

இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 1997 குடும்பங்களுக்கும் 10 ஆம் கட்ட நிவாரணப் பொருள்களை வழங்கும்படி உத்தரவிட்டதற்கிணங்க நாகர் கோவில், அம்பன், குடத்தனை, மணற்காடு கிளைகளில் வைத்து உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. (18)

## கடத்திய தங்கத்தை விழுங்கிய பெண்

கடந்த திங்கட்கிழமை சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு வந்து இறங்கிய நடுத்தர வயதினரான இந்தியப் பெண் ஒருத்தி [illegible]வாகக் கடத்தி வந்த தங் [illegible] டார். அவர் தடுத்துவைக்கப்பட்டுப் பேதிமருந்து கொடுக்கப்பட்டபோது 240 கிராம் தங்கம் வெளியே வந்தது. தங்கத்தின் பெறுமதி ஒருலட்சத்து இருபதினாயிரம் ரூபாவாகும்.

# ராஜீவ் கொலை சந்தேகநபர்

# சண்முகம் தி.மு.க. உறுப்பினர்

ராஜீவ்காந்தி கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான சண்முகம் என்பவர் தி.மு.க உறுப்பினர் என்றும் அவர் கொலை செய்யப்பட்டார் என்றும் இந்திய தினசரி ஒன்று தெரிவிக்கின்றது.

அந்தத்தினசரி சண்முகத்தின் கொலையினால் ராஜீவ் பற்றிய புலனாய்வு பின்னடைகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இவர் தூககிட்டுத்தற்கொலை செய்ததாகப் பொலிஸார் முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

□ □

## சேவைக்கால ஆலோசகர்கள்

வேலணைக் கோட்டத்திற்கு நெடுந்தீவைச் சேர்ந்த ஆசிரியர்கள் புலவர் A. W. அரியநாயகம் தமிழ்மொழிக்கும், திரு. நா. கணேசன் விஞ்ஞானத்திற்கும் திரு செ மகேசு ஆரம்பக் கல்விக்கும் சேவைக்கால ஆலோசகர்களாக யாழ் கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நிவாரணம்

நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிப் போக முடியாமல் இருக்கும் நெடுந்தீவு மக்களின் நலன் கருதி நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் யாழ் அரச அதிபரைச் சந்தித்து கேட்டுக் கொண்டதற்கிணங்க யாழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் 3 நாள்களுக்குத் தேவையான உலர் உணவுகளை யாழ் புனித யுவானினர் மண்டபத்தில் வைத்து வழங்கினர்

## விசேட கூட்டம்

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு வடமராட்சி முதலுதவி மையங்களில் பயிற்சி பெற்ற சகலருக்குமான விசேட கூட்டம் இம் மாதம் 27ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ் / நெல்லியடி ம.ம. வித்தியாலய மகளிர் பிரிவில் நடைபெறும். பயிற்சி பெற்ற சகலரும் தவறாது சமூகம் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றனர். அன்றைய தினம் புதிய முதலுதவிப் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்படும். பயிற்சி பெற விரும்புவோரும் அன்றைய தினம் சமுகம் கொடுக்கவும்.

## பணியாட்கள் பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறியானது கல்வித் திணைக்களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் பணியாற்றும் பணியாட்களுக்கான பயிற்சி நெறி ஆகும் இப்பயிற்சி நெறியானது. நாளை காலை 8.30 மணிக்கு கல்வி அதிபதி தலைமையில் யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

## சங்காபிஷேகம்

விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு ஆசி வேண்டியும் மரணித்த போராளிகளின் ஆத்ம சாந்திக்குமாக, நாளை காலை 8 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

## கம்பன் கழக விழா ஒத்திவைப்பு

இம் மாதம் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவிருந்த ''கம்பன் விழா'' நாட்டின் இன்றைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்றும் நிலைமை சீராகியதும், விழாவுக்கான புதிய திகதி அறிவிக்கப்படும் என்றும் கம்பன் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்,

## நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் அறுவடை விழா

இன்றைய காலகட்டத்தில் உள்ளூர் உணவுப் பயிர்களை உற்பத்திசெய்தலைஊக்குவிக்கும் முகமாகவும், அதன் அவசியத் தன்மையை வலியுறுத்தும் முகமாகவும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் முதற்கட்டமாகச் சங்கக் காணியில் உற்பத்தி செய்யப்பட்ட தினை, குரக்கன் ஆகியவற்றின் அறுவடை நேற்று சம்பிரதாய பூர்வமாக நல்லூர் ப. நோ. கூ.சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் அறுவடை விழாவாக நடைபெற்றது. இவ் விழாவில் யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் சி. சிவமகாராஜா, வேலணை ப. நோ. கூ. ச. தலைவர் திரு. நடராசா ஆகியோர் அறுவடையை ஆரம்பித்து வைத்தனர். தொழிற் சங்கத்தலைவர்இ கனகலிங்கம் பொதுமுகாமையாளர் ஆகியோர் அறுவடை விழாவல் பங்கு பற்றினர்.

சங்கத்துக்குச் சொந்தமான 61 பரப்புக்காணியில் 30 பரப்பில் முதற்கட்டமாகத் தினையும், மரவெள்ளியும் உற்பத்தி செய்யப்பட்டன,இவ்வுற்பத்தி காலக்கிரமத்தில்விரிவடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் அறுவடைவைபவத்தில் வடகிழக்கு உதவி விரிவாக்கப் பணியாளர் அ. குணரெட்ணம், வி. பு. கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் மயூரன், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் சிவசுப்பிரமணியம் ஆகியோரும் இதில் பங்குபற்றிச் சிறப்பித்து வைத்தனர். ப-11

## இராணுவ நடவடிக்கையால் பெருமளவு பயிர் சேதம்

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாகப்பயிர்ச்செய்கைபெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையினால் கால்நடைகள் பயிர்களைப் பெரிதும் அழித்துள்ளன.

அத்துடன் நீர் வசதி செய்து கொள்ள முடியாத நிலைமையினாலும் பயிர்கள் பெருமளவு சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (43)

## இலங்கைக் கிரிக்கெட் அணி இங்கிலாந்து பயணம்

இலங்கை கிரிக்கெட் அணி அரவிந்த டீ சில்வா தலைமையில், இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு எதிரான ரெஸ்ற் கிரிக்கெட் பந்தயங்களில் கலந்துகொள்ள நேற்று முன்தினம் இங்கிலாந்திற்கு பயணமானது.

இலங்கைக்கு 1981 ஆம் ஆண்டு ரெஸ்ற்கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் அந்தஸ்து கிடைத்தது: அன்று தொட்டு இதுகால வரையில் அணிக்கு வீரர்களை.தெரிவு செய்யும் முறையில் அரசியல் ஊடுருவல்களும் குளறுபடிகளும் இருந்து கொண்டே வந்துள்ளது. திரு காமினி திசாநாயக்கா கிரிக்கெட் கட்டுப்பாடுச் சபையின் தலைவராய் இருந்தபோதே இலைமறைவு காய்மறைவாய் இருந்த முறைகேடுகள் சமீப காலத்தில் விசுவரூபம் பெற்றுள்ளதை அவதானிக் கூடியதாய் உள்ளது

முன்னை நாள் கிரிக்கட் அணித்தலைவர் அரிச்சுனரணதுங்க இம்முறை அணியில் இருந்து விலக்கப்பட்டமைக்கு அவர் சக அணி வீரர்களுடன்ஒத்துப்போகவில்லை, முகாமையாளரைப். பொருட்படுத்தவில்லை என்று அரசு கூறியபோதிலும் அர்ச்சுனாவின் தந்தை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருப்பதே உண்மையான காரணம் என்று கூறப்படுகின்றது.

இம்முறை முத்தையா முரளீதரன் என்ற தமிழ் இளைஞன் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தாலும், முரளீதரனுக்கு 12-வது இடமாவது கிடைக்குமா என்பது சந்தேகம்தான். சென்ற முறை இலங்கை அணியின் இங்கிலாந்து விஜயத்தின் போது, லோட்ஸ் மைதானத்தில் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அங்குள்ள தமிழ் அனுதாபிகள் மைதானத்திற்குள் புகுந்து குழப்பம் விளைவித்ததுபோல் இம்முறையும் ஏதாவது அசம்பாவிதம் இடம் பெறாமல் செய்வதற்காகவே தமிழன் ஒருவர் (முரளிதரன்) நீண்டகால இடைவெளிக்குப் பின் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். 16

## வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள்

வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை விமானக் குண்டு வீச்சுக்களை யடுத்து பல குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளன.

மருதங்கேணியிலிருந்து 345 குடும்பங்களும், உடுத்துறையிலிருந்து 437 குடும்பங்களும் வத்திராயன் பகுதியிலிருந்து 297 குடும்பங்களும், ஆழியவளையிலிருந்து 302 குடும்பங்களும், வெற்றிலைக்கேணியிலிருந்து 248 குடும்பங்களுப் முள்ளியானிலிருந்து 226 குடும்பங்களும், போக்கறுப்பு பகுதியிலிருந்து 97 குடும்பங்களும் சுண்டிக்குளம் பகுதியிலிருந்து 05 குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளதாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (38)

# இன்று லட்டு தரும் அன்புக்கரங்கள்

## நாளை ஆயுதம் தயாரிக்கும் வீரக்கரங்கள்

இன்று லட்டுக்கள், முட்டைமா, உருண்டைகள், முறுக்குகள், எள்ளுப்பாகுகளைச் செய்து எமது போராளிகளின் பசி தீர்க்கும் அன்புக் கரங்கள், நாளை ஆயுதங்கள், வெடிமருந்துகள், எறிகுண்டுகளை உற்பத்தி செய்துதரும் வீரக் கரங்களாக மாறிவிடும் என்பது திண்ணம்.

இவ்வாறு ''விடுதலைப் புலிகள்'' அதிகாரபூர்வ ஏடு அதன் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. ஆசிரியத் தலையங்கத்திலிருந்து மேலும் சில பகுதிகள்:—

''புலிகள் இயக்கம்இம் முறை களத்தில் இறக்கிய நவீனரக போராயுதங்கள், சிங்கள இராணுவத்தை நிலைகுலையச் செய்தன. ஆகாயப்படையும் வெருண்டு ஒடியது. இதுவரை காலமும் தமிழீழ வானை ஆக்கிரமித்துப் பேயாட்டம் ஆடிவந்த விமானக் கழுகுகளின் சிறகுகள் உடைக்கப்பட்டன. இராட்சதத் தும்பிகள் தரையிறங்க முடியாது அண்டவெளியில் அங்கலாய்த்தன.

ஆனையிறவு இராணுவத்தினருக்கு ஆகாயத்திலிருந்து பெறப்பட்ட உணவு, ஆயுத விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டது. இதனால் முற்றுகைப்போர் என்றுமில்லாத வகையில் பயங்கரமாக இறுகியது. செத்து அழுகிய பிணங்களையும், காயப்பட்டுக் குற்றுயிராய்ச் செத்துக் கொண்டிருப்பவர்களையும் அப்புறப்படுத்த முடியாது இராணுவம் திண்டாடியது.

இதற்கிடையில் புலிப்படை சிங்களப் பாசறையின் மையத்தை நெருங்கி விட்டது. வரலாற்றில் முதற்தடவையாக 800 வீரர்களைக் கொண்ட ஒரு சிங்களப் படையணி புலிகளின் பொறியில் செம்மையாக மாட்டிக் கொண்டது.

இதுவரை காலமும் புலிகளுக்கு எதிரான போர்பற்றி புராணக் கதைகளைக் கூறிச் சிங்கள தேசத்தை ஏமாற்றி வந்த பிரேமதாஸ அரசுக்கு ஆனையிறவு முற்றுகை ஒரு பெரிய சவாலாக எழுந்தது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரியதொரு இராணுவத்தளத்தையும் பறிகொடுத்து, பலநூற்றுக் கணக்கான வீரர்களையும் பலிகொடுத்து ஒரு பாரிய இராணுவத்தோல்வியைச் சந்தித்ததால் அதன் எதிர் வீச்சுகள் பாரதூரமாக அமையும் என்பதை அரசு உணர்ந்து கொண்டது.

உடனடியாகவே ஆனையிறவை மீட்கும் இடர்காப்பு படையெடுப்பு ஒன்றில் குதித்தது. கடல்மார்க்கமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட படைவீரர்கள் வடமராட்சிக் கிழக்குக் கடலோரம் குவிக்கப்பட்டனர். வெண் மணற்றிடல்களைக் கொண்ட இந்தப் பரந்தவெளிப் பாலைவனத்தில் புதிய யுத்த அரங்கு திறக்கப்பட்டது.

நீண்ட நெடுங்காலமாக முடிவில்லாமல் இழுபட்டுவரும் தேசியப் பிரச்சினை, தொடர்ச்சியாக தீவிரமடைந்து வரும் இராணுவ அடக்குமுறை, திட்டமிட்ட பொருளாதார சீரழிப்புக் கொள்கை, இந்த நெருக்குதல்களால் படுமோசமாகி வரும்வாழ்க்கைப் பிரச்சினை-இவையெல்லாவற்றிற்கும் தொடர்ச்சியாக முகம் கொடுத்து பொறுமையிழந்த ஆவேசம் தமிழ் மக்களை சிங்கள ஆளும் வர்க்கம் மீது கொதித்தெழச் செய்திருக்கிறது.

எதிரி மீதான இந்தக் கொதிப்புணர்வும், போராடினால்த் தான் விடிவுண்டு என்ற விழிப்புணர்வும், புலிகளின் இலட்சியப்போரில் எழுந்த பற்றுணர்வும் ஒன்று திரண்ட ஒரு புதிய வேகம் மக்களை ஈர்த்திருக்கிறது, ஆனையிறவு முற்றுகைப் போர் இந்த உணர்வு வேகத்திற்கு ஒரு வெளிப்பாட்டுக் களமாக அமைந்திருக்கிறது. புலிகளின் விடுதலைப்போர் ஒரு மக்கள் யுத்தமாக உயர் வடிவம் பெறும் என்பதற்கு இது ஒரு நம்பிக்கையூட்டும் அறிகுறியாகும் இன்று லட்டுகள், முட்டை மா உருண்டைகள், முறுக்குகள், எள்ளுப் பாகுகளைச் செய்து எமது போராளிகளின் பசி தீர்க்கும் அன்புக்கரங்கள், நாளை ஆயுதங்கள், வெடிமருந்துகள், எறிகுண்டுகளை உற்பத்தி செய்து தரும் வீரக்கரங்களாக மாறிவிடும் என்பது திண்ணம்.

ஆனையிறவு முற்றுகைப் போர் இப்படியானதொரு மாபெரும் வரலாற்றுத் திசை திருப்பத்திற்கு வழி கோலும் முக்கியபோராட்ட நிகழ்வாக அமையும். ஆனையிறவு ஒரு போர்க்களம் மட்டுமல்ல, தமிழீழத் தேசிய எதிர்ப்பியக்கத்தின் ஒரு வரலாற்றுச் சின்னமாகவும் அது திகழப்போகிறது. அந்த வரலாற்றைத்தான் ஆனையிறவில் புலிப்படை வீரர்கள் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

## முல்லைத்தீவுக் களஞ்சியத்தில் உணவுப் பொருள் இல்லை

முல்லைத்தீவு உணவுக் களஞ்சியம் வெறிச்சோடியதையடுத்து உலர் உணவு நிவாரணப் பணி மேலும் தொடரமுடியாமல் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

தற்போது இம் மாவட்டத்தில் ஏழு கட்ட உலர் உணவு நிவாரணமே வழங்கப்பட்டதாகவும் தொடர்ந்து நிவாரணம் வழங்கக் கையிருப்பில் உணவு இல்லாத அபாய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் வவுனியா, முல்லைத்தீவுப் பகுதியில் அமுலில் இருந்து வருவதால் உணவுப் பொருள்களை எடுத்து வர முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்படாமல் தொடர்ந்தும் அமுல் செய்யப்பட்டு வருவதால் இம் மாவட்ட வெளிமாவட் மக்கள், அகதிகள் பட்டினியால் வாடுகின்றனர். (38)

வவுனியாவில்

## இராணுவ சோதனையில் பொருள்களைப் பறி கொடுத்தார்

சவூதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் வவுனியா இராணுவத்தினரிடம் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பறி கொடுத்தார்.

வியாபாரி மூலையைச் சேர்ந்த த. ரவீந்திரன் என்ற இந்த வாலிபர் வவுனியாவை வந்தடைந்ததும் சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனையின் போது தனது தேவைக்கென எடுத்து வரப்பட்ட விலையுயர்ந்த உடுப்பு மற்றும் பொருள்களைப்பறிகொடுத்ததோடு கையில் இருந்த ஒரு பவுண் மோதிரத்தையும் இழந்துள்ளார்.

இராணுவத்தினரின் நடத்தையால் வேதனையடைந்த இவர் இராணுவ அதிகாரியிடம் முறையிட்ட போது விடப்பட்ட மீதிப்பொருளுடன் செல்லுமாறு எச்சரிக்கப்பட்டதாக இந்த வாலிபர் தெரிவித்தார். (38)

## யாழ் தொழில் திணைக்களத்தின் கல்விக் கருத்தரங்கு

பருத்தித்துறையில் யாழ் தொழில் திணைக்களம் தொழிலாளர்களின் நலன் கருதி இருநாள் தொழிலாளர் கல்விக் கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளது. இத் தொழிலாளர் கல்விக் கருத்தரங்கிற்கான நடவடிக்கைகளை யாழ் தொழில்திணைக்கள உதவித் தொழில் ஆணையாளர் கே. சிவப்பிரகாசம் மேற்கொண்டுள்ளார்.

இத் தொழிலாளர் கல்விக் கருத்தரங்கிலே தொழிலாளர் கல்வி நடவடிக்கைகள், குடும்ப நலன், வைத்திய ஆலோசனைகள், சேமிப்பு பழக்கங்கள், தொழில் பிரச்சினைகள் பற்றிய கருத்துரைகளைத் தொழில்சார் நிபுணர்கள் வழங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## கடற்படைதாக்கி ஒருவர் காயம்

பூநகரி கடற்பகுதியில் மீன்பிடிப் பிளாஸ்டிக் வள்ளமும், சிறிய மரவுள்ளாவும் நின்ற சமயம் இவைகளைச் சுற்றி வட்டமிட்ட சீ-பிளேன் சென்ற சில நிமிடங்களில் விசைப்படகில் வந்த கடற்படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் சிறிய மீன்பிடிக் குல்லா முற்றாகச் சேதமுற்றது.

இதில் இருந்த மூவரில் ஒருவர் காயமுற்ற நிலையில் பள்ளிக்குடா - கட்டைவேலிக் கரைக்கு நீந்திச் சென்றனர்.

பிளாஸ்டிக் படகு மயிரிழையில் தப்பி இதே கரையை வந்தடைந்தது. இதில் இருந்தவர்கள் எவரும் காயமடையவில்லை. (ப-35)

## 3ஆம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு

மேற்படி பயிற்சி நெறி எதிர்வரும் 29—07—91 இல் நடைபெற இருப்பதால் இப் பயிற்சி நெறியை பெற விரும்புவோர் நாளை 26-7-91 க்கு முன்பு தங்கள் பெயர்களை யாழ் கல்வித் திணைக்களத்தின் மாவட்ட முகாமைத்துவ நிலையத்தில் பதிவு செய்துகொள்ளவும்.

தொடர்: 3

# ஆனையிறவு

— 'அரவிந்தன்'

கடற்கரைப் பட்டினங்களிலும், யாழ்ப்பாணக் கிராமங்களிலும் நுழைந்து கொள்ளையிட்டுச் சென்றனர். திருகோணமலைப் பகுதியிலிருந்து, கிழக்குக் கரையோரமாகப் பறங்கிப் பட்டாளங்கள் யாழ்ப்பாணம் வரவேண்டியிருந்தது. அதனால், இயல்பாகவே குடிசனம் குறைந்திருந்த சுண்டிக்குளம், வெற்றிலைக்கேணிப் பகுதிகள் குடிசனமற்ற பாழ் நிலங்களாயின. தமது பட்டாளத்தின் போக்குவரவுக்குப் பாதுகாப்பாகப் பாதைகளில் அரண்கள் நிறுவவும் வேண்டி நேர்ந்தது. இவை அனைத்தும் அழுத்தியதால், போர்த்துக்கேயர் ஆனையிறவுப் பகுதியில் மூன்று சிறுசிறு கோட்டைகளை அமைத்தனர். யாழ்ப்பாண அரசிலிருந்து பெருநிலப் பகுதிக்குச் செல்கின்ற மூன்று பாதைகள் செல்லும் பகுதிகளில் அவற்றினை அமைத்தனர்.

முதற்கோட்டை ஆனையிறவில் அமைக்கப்பட்டது. இது இன்றுமுள்ளது. இரண்டாவது கோட்டை இயக்கச்சிச் சந்தியில் (கண்டிவீதிச் சந்தியில்) அமைக்கப்பட்டது. அதற்கு 'பைல்' (PYL) கோட்டை எனப்பெயரிட்டனர். மூன்றாவது கோட்டை வெற்றிலைக்கேணிக் கரையோரத்தில் அமைக்கப்பட்டது. இதனை 'பெஸ்குற்றர்' (BESCHVTER) கோட்டை என்றழைத்தனர். இக் கோட்டைகள் அனைத்தும் முருகைக்கற்களால் கட்டப்பட்டன. சதுரவடிவக் கோட்டைகளாக விளங்கின. ஆனையிறவுக் கோட்டைச் சுவர்கள் 6 அடிகளுக்கு மேல் தடிப்பானவை. நான்கு கொத்தளங்களைக் கொண்டிருந்தன. கிழக்குப்பக்க மதிலும், வடக்குப்பக்க மதிலும் கடல் நீர் வந்து தொடும் அமைப்பின. பன்னிரண்டு அடிகள் வரையிலான உயரம் கொண்ட மதில்களின் நான்கு மூலைகளிலும் கொத்தளங்கள் இருந்தன. பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. இடித்துப்பாக்கிகளை ஏந்திய பறங்கிகளும், துப்பாசிகளும் (பறங்கிகளுக்கும், சுதேசிகளுக்கும் பிறந்தவர்கள்) காவல் காத்தனர்.

இயக்கச்சியில் அமைந்திருந்த பைல் கோட்டையின் இடிபாடுகளை இன்றும் காணலாம்; முருகைக் கற்களால் கட்டப்பட்ட சிறிய கோட்டை இதுவாகும். இக்கோட்டை வாசலைக் கடந்தே பழைய கண்டி மண் வீதி சென்றது. வெற்றிலைக்கேணிக் கடற்கரை வீதியை அடுத்து, பெஸ்குற்றர் கோட்டை அமைக்கப்பட்டிருந்தது. அது இன்று முற்றாக அழிந்து விட்டது. எனவே, ஆனையிறவுப் பிரதேசத்தில் பெருநிலத்தோடான இணைப்பு வாயில்கள் மூன்றிலும்; பாதுகாப்பு அரண்களாக மூன்று கோட்டைகள் முளைத்து நின்றிருந்தன.

இக்கோட்டைகளில் போர்த்துக்கேய இராணுவத்தினர் நிலை கொண்டனர். இக்கோட்டைகளை அடுத்துச் சென்ற பாதைகளில் பயணம் செய்தோர் 'ஊடுபோக்குவரி' எனப்படும் வரி ஒன்றினை இறுக்க நேர்ந்தது. பார வண்டில்கள், பொதிமாடுகள், தலைச்சுமை என்பன மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆனையிறவூடாகப் புடவைகள், புகையிலை, பனங்குட்டான் முதலியன வன்னிப் பகுதிகளுக்கும், கண்டிக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. முத்திரை குத்தப்பட்ட துணிகளையே ஆனையிறவுக்கு அப்பால் எடுத்துச் செல்ல அனுமதி இருந்தது. ஆனையிறவு 'ஊடுபோக்கு'ப் பரிசோதனையின் போது பிடிக்கப்பட்ட முத்திரை குத்தப்படாத துணிகள், முத்திரைச் சந்திக்குத் திருப்பியனுப்பப்பட்டன. அங்கு உரிய முத்திரை குத்திய பின்னரே, ஊடுபோக்குவரி அறவிடப்பட்டது. 3 சேலைகளுக்கும், 4 கச்சுகளுக்கும், 100 தலைக்கட்டு லேஞ்சிகளுக்கும் ஊடுபோக்கு வரியாக ஒரு பணம் அறவிடப்பட்டது. புகையிலைக்கு ஊடுபோக்கு வரியாக 4% அறவிடப்பட்டது எனினும், புகையிலையை ஆனையிறவைக் கடந்து கொண்டு செல்வதில் பெரும் கெடுபிடி இருந்தது. புகையிலை வரியைக் குத்தகையாக எடுத்த குத்தகைக்காரர்களைத் தவிர வேறு எவரும் புகையிலை வியாபாரம் செய்ய முடியாது. குத்தகைக்காரனின் உத்தரவுச் சீட்டு இல்லாமல் எவரும் புகையிலையை வைத்திருக்க இயலாது. எனவே, புகையிலையை வன்னிப் பகுதிகளுக்கும், கண்டிக்கும் எடுத்துச் செல்வோர், புகையிலைக் குத்தகைக்காரனின் உத்தரவுச் சீட்டை ஆனையிறவில் காட்டியே அப்பால் செல்ல முடிந்தது.

வன்னிப் பகுதிகளிலிருந்து ஆனையிறவு, பைல், பெஸ்குற்றர் கோட்டைப் பாதைகளூடாகப் பஞ்சு, வரகு, நெல், அரிசி, குரக்கன் என்பன யாழ்ப்பாண அரசுக்கு வந்தன. ஒரு மாடு சுமக்கும் பஞ்சுப் பொதிக்கு ஊடுபோக்கு வரியாக ஆனையிறவில் $\frac{1}{4}$ பணம் இறுக்க நேர்ந்தது. வரகு, குரக்கன் தானியமாயின் 6 மாட்டுப் பொதிகளுக்கு ஒரு பணம் வரியாக அறவிடப்பட்டது. மேலும், தென்மராட்சியிலுள்ள மக்கள் மாரி காலத்தில் வன்னிப் பகுதிகளுக்குக் கமம் செய்யச் செல்வது வழக்கம். கண்டாவளை, பூநகரிப் பகுதிகளில் நெற்செய்கை பண்ணவும், கோரக்கன் கட்டு (குரக்கன் காடு)ப் பகுதியில் குரக்கன் செய்கை பண்ணவும் செல்வர். அவ்வாறு செய்கை பண்ணப்படும் ஒவ்வொரு கமத்துக்கும் 10 லாச்சப் வரியாகக் கட்ட நேர்ந்தது. கண்டாவளை, கோரக்கன்கட்டுப் பகுதிகளில் கமம் செய்தோர் ஆனையிறவில் இவ்வரியைச் செலுத்த நேர்ந்தது.

கண்டிப்பகுதியிலிருந்து பாக்கு, மிளகு, யானை என்பன யாழ்ப்பாணத்துக்கு விற்பதற்காக எடுத்து வரப்பட்டன. அவை ஆனையிறவு தடைமுகாமில் பரிசோதனைக்குள்ளாகி வரி அறவிடப்பட்டன. கண்டி அரசனின் ஊர்களிலிருந்து வரும் பொருள்களுக்கான ஊடுபோக்கு வரி சற்று அதிகமாக இருந்தது. பாக்கு ஒரு அவணத்துக்கு (24000 பாக்கு) ஒரு லாறிம் வரி அறவிடப்பட்டது. மிளகுக்கு 10% வரியும் யானைக்கு $7\frac{1}{2}\%$ வரியும் அறவிடப்பட்டன. போர்த்துக்கேயரின் அனுமதியில்லாமல் எவரும் யானைகளைப் பிடிக்க இயலாது.

(வளரும்)

# யாழ் உணவு நிலைமைகள் குறித்து அரச அதிபர் மீண்டும் தொடர்பு

ஒரு வாரத்துக்கு மேலாக உள்ளஊரடங்குச்சட்டத்தால் யாழ் மாவட்டத்தின் உணவு நிலைமைகள் குறித்து அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் மீண்டும் கொழும்புடன் அவசரத் தொடர்பு கொண்டுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வானொலித் தொடர்பு சாதன மூலம் அரசாங்க அதிபர் நேற்று அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொண்டு இங்குள்ள உணவுப்பிரச்சினையை சீராக்க உதவுமாறு வேண்டுகோள்விடுத்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்குரிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கொழும்புத்துறைமுகத்தில் இரு கப்பல்கள் தயாராக நிற்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி ஒரு கபலையாவது பருத்தித்துறைக்கு அனுப்பத் தான் நடவடிக்கை "எடுப்பதாக அத்தியாவசிய சேவையாளர் ஆணையாளர் தெரிவித்ததாகவும் அவ்வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. 74

# அராலியிலும் மக்கள் அஞ்சலி

புல்லாவெளியில் இடம்பெற்ற மோதலில் வீரமரணம் அடைந்த போராளிகளான சுருளி (சிவகுரு அப்பன் மயிலிட்டி), டயஸ் (நாகமுத்து ஸ்ரீசங்கர் - அச்செழு), சிவா (ராயப்பு அன்ரனி அமலநோசன் - நிலாவெளி) ஆகியோர்களின் புகழுடம்புகள் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. பெருந்தொகையான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மனோ (தியாகராசா மகேந்திரன்-அக்கரைப்பற்று), ஹைலன்ட் (இராமலிங்கம் ராஜ்-களுவாஞ்சிக்குடி) ஆகியோர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து இப்புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் சகல மரியாதைகளுடன் தீயுடன் சங்கமமாகின.

(19, 79, 12)

# தீவகத்திலும் அஞ்சலி

புல்லாவெளியில் வீரமரணமடைந்த லதன் (வேலாயுதம் திருநாமம் - புங்குடுதீவு), நிசாந்தன்(யூட் அன்ரனி -நெடுந்தீவு), (மகாலிங்கம் சதீஸ்குமார் -புங்குடுதீவு) ஆகியோர்களின் புகழுடம்புகள் வேலணையில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலகத்தில் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

லதனின் புகழுடம்பு புங்குடுதீவு துரைசுவாமி மகளிர் மகாவித்தியாலயத்திலும், பின்னர் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின் வேலணை சாட்டி மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

யூட் அன்ரனி, மகாலிங்கம் சதீஸ்குமார் ஆகியோரின் புகழுடல்கள் புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்திலும் வேலணை கிழக்கு செட்டிபுலம் அ. த. க. பாடசாலையிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வேல்ணை மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின.

(19)

# காரைநகர் மக்கள் வசதிக்கு இரு தினங்களில் அலுவலகம்

காரைநகர் மக்களின் நலன் கருதி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சங்கானை உதவி அரசாங்க அதிபர் ப்ணிமனையில் தற்காலிகமாக வாரந்தோறும் செவ்வாய், வியாழக்கிழமைகளில் இயங்கி வருகின்றது.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம் மேற்கு பிரிவில் தஞ்சமடைந்துள்ள மக்களின் பொது சன உதவிப்பணம் தற்போது சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. 12

# காரைநகர், தீவுப்பகுதி தபாலகங்கள் திறக்க முயற்சி

காரைநகர், ஊர்காவற்றுறை தபாற் கந்தோர்களை திறக்குமாறு கொழும்பில் உள்ள தபால் திணைக்களம் யாழ் மாவட்டத் தபால் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளது.

இவற்றை மீண்டும் திறப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தபால் அத்தியட்சகர் ச.சடாட்சரநாதன் தெரிவித்தார்.

முதற்கட்டமாக யாழ் மாவட்டத் தபால் அத்தியட்சகர் பிரிவு நுண்ணாய்வுப் பரிசோதகர், அத்தியட்சகர் கொண்ட குழுவொன்றும் இப்பகுதிகளுக்குச் செல்லவுள்ளது.

(74)

# சண்முகம் கொலை அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும்

ராஜீவ் காந்தி கொலையில் முக்கிய சந்தேக நபரான சண்முகம் மரணமடைந்தமை குறித்தான முழுமையான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனிடையே புலனாய்வுக் குழுவினரின் விசாரணையில் இருந்த சண்முகம் எவ்வாறு மரணமடைந்தார் என்பது குறித்து புலனாய்வுக்குழுவின் தலைமைப்பீடம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

## காலமானார்

### திரு. குருநாதி வேலுப்பிள்ளை

(ஒளி, ஒலி அமைப்பாளர்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒளி, ஒலி அமைப்பாளர் திரு குருநாதி வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ் சென்ற தங்கம்மாவின் அருமைக்கணவரும், திருநாவுக்கரசு காலஞ்சென்ற சிவகடாட்சம் இராசரத்தினம், மகாதேவா, நவரத்தினம், சிவசுப்பிரமணியம், இராசலட்சுமி, அமிர்தாதேவி, புவனேஸ்வரி ஆகியோரின் தந்தையும், சுப்பிரமணியம் ஞானசம்பந்தர், பரமேஸ்வரன் இராசம்மா, உருத்துராணி, காலஞ் சென்ற சரோஜினிதேவி, யோகேஸ்வரி, லதா ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 51 சிவன் வீதி, திருநெல்வேலி இல்லத்தில் இருந்து இன்று 25. 07. 91 மாலை 4 மணிக்கு கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்

51 சிவன்வீதி,
திருநெல்வேலி.

தகவல்: ரமணதாஸ்
07099

# செஞ்சிலுவை லொறியை விரட்டிய ஹெலி

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு தபால் பொதிகளை ஏற்றச் சென்ற செஞ்சிலுவைச் சங்க லொறியை வல்லை வெளியில் வைத்து ஹெலியொன்று மூன்று தடவைகள் வட்டமிட்டபொழுது செஞ்சிலுவைச்சங்க உறுப்பினர்கள் லொறியில் இருந்து இறங்கி செஞ்சிலுவைச்சங்கக் கொடியை உயர்த்திக் காட்டினர்.

தொடர்ந்தும் அந்தக் ஹெலி அவர்களைச் சுற்றி வட்டமிட்டுப் பின் வெற்றிலைக்கேணிப் பக்கமாகச் சென்றது.

(18, 43, 50)

## விவரம் சேகரிப்பு

நாட்டிலுள்ள அரசாங்க அலுவலகங்களில் எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் பற்றிய விவரங்களை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்று நிருபம் மூலம் கோரியுள்ளது

இச்சுற்று நிருபத்தில் ஓய்வு பெற்றவர்களால் ஏற்பட்ட வெற்றிட விவரங்களை இதில் சேர்க்க வேண்டாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது 33

## யாழ்மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சையை நடாத்த ஏற்பாடுகள்

1991 க. பொ. த உயர்தரப் பரீட்சை குறித்து இம்மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் பரீட்சை ஆணையாளருடனும், அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடனும் யாழ் கல்விப் பணிப்பாளர் தொடர்பு கொண்டுள்ளார்

இதனால் க. பொ. த.உயர்தரப் பரீட்சையை நடாத்துவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பரீட்சை நிலைய உத்தியோகத்தர்களை நியமிப்பதிலும் கல்வித் திணைக்களம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் அறுபத்தேழு நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது. இவ்விடயத்தில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அக்கறையெடுத்து உதவி செய்து கொண்டிருப்பதால் இப்பரீட்சை தடையின்றி நடைபெறலாம் என கல்விப் பணிப்பாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

## தங்கக்கடத்தல் மோசடி ராஜதந்திரி தப்பி ஓடினார்

தங்கக் கடத்தல் மோசடி தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட கொழும்பிலுள்ள பிலிப்பைன்ஸ் இராஜதந்திரி நாட்டை விட்டு தப்பி ஓடிவிட்டதாகச் சுங்கப்பகுதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராஜ தந்திரிக்கான சபை அலுவலகம் ஒன்று கடந்த மாதம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் திறக்கப்பட்ட பொழுது இவரின் பையில் இருந்து 515 தங்கப் பாளங்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து இவருக்கு 9 கோடியே 90 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஆனால் இவர் தான் எவ்வித குற்றமும் அறியாதவர் என்றும் தனது பைக்குள் தங்கம் இருந்தது பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்றும் கூறியுள்ளதாகச்சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

33

### தென்மராட்சியில்...

வகுப்பு மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகின

இதேபோல கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட சந்திர நாயகி சிவமலர் வடிவேலு-கிளாலி) ராஜபாரதி (நாகலிங்கம் சிறிதவராசா -மட்டக்களப்பு), ஆகியோரது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக கிளாலி றோ க பாடசாலையில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

இவ் அஞ்சலி நிகழ்ச்சியில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு கண்ணீர் ததும்ப தமது வீர அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

பின்னர் இம்மாவீரர்களின் புகழுடல்கள் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு ஊர்வலமாகஎடுத்துச்செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகின

ப 5

### ஆழிய...

இதேவேளை ஆழியவளை நோக்கி படையினர் மீண்டும் முன்னேற முயற்சி செய்தபோது விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு அவர்களைப் பின்வாங்கச் செய்தனர் (43, 50)

### பச்சிலைப்...

சங்கத்தார் வயலைச் சேர்ந்த சின்னக்குட்டி சின்னையா (60 என்பவர் காயமடைந்து பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (79)

### 29சடலங்கள்..

ணுவச் சடலங்களும் செஞ்சிலுவை மூலம் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறித்துவெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் முக்கியத்துவம் கொடுத்துச்செய்தி வெளியிட்டுள்ளன

இச்சடலங்கள் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படாமலேயே காரைநகர் கடற்படை முகாமில் வைத்துத் தகனம் செய்யப்பட்டமை குறித்து முரசொலி நேற்று செய்தி வெளியிட்டமை தெரிந்ததே.

### நிலாவெளி.

ருந்து 500 யார் தூரத்தில் வைத்து படையினர் மீதுபுலிகள் கிளைமர் தாக்குதலையும் துப்பாக்கித்தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் 2 சிப்பாய்கள் பலியானதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

### பாலம்...

உயர்தர வகுப்பு மாணவப் பிரதிநிதிகள், சகல பாடசாலைகளின் ஆசிரியப் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்களின் பிரதி நிதிகள், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்கள், பல்கலைக்கழக தொழில் நுட்பக் கல்லூரி மாணவப் பிரதிநிதிகள், தனியார் கல்வி நிறுவனப் பிரதிநிதிகள் ஆசிரியப் பிரதிநிதிகள், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், முறைசாராக் கல்வி மாணவப் பிரதிநிதிகள், ஆசிரியப் பிரதி நிதிகள், ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகள், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைப் பிரதி நிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### 250க்கும்...

தொடர்ந்தும் புலிகளின் பூரண முற்றுகைக்குள் வைக்கப்பட்டுள்ளது. முகாமை நோக்கி நகர முற்படும் படையினர் தொடர்ந்து இடைமறித்து வைக்கப்பட்டுள்ளனர் என மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சியில்..

ருந்தும் வரும் பெரும்பாலானவர்கள் இங்கு வந்து தஞ்சம் புகுந்துள்ளனர். தற்போது வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்தும் மக்கள் இங்கு வந்துள்ளனர். இவர்களுக்கு போதிய நிவாரணம் வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இம் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என அரசு அறிவித்திருப்பதால் இப் பகுதியில் உணவு நிலை மேலும் பாதிக்கபபடும் எனவும் தெரியவருகிறது. 50, 74

### சிற்றுண்டி –

வழங்குவதற்கு சிற்றுண்டிக்கான மூலப்பொருள்களை சேகரித்தும், பதனிட்டும் எந்நேரமும் தயாரிக்கக்கூடிய வகையில் தயார் பண்ணிக் கைவசம் வைத்திருக்குமாறும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் அன்புடன் வேண்டிக்கொள்கின்றனர்.

மேலும் மண்வெட்டி, பிக்கான், சவல், வெற்றுச்சாக்குகள், வெற்றுஉரப்பைகள், பற்றறிகள் என்பவற்றை அவசியம் தந்துதவும்படியும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகம் கேட்டுள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 25.07.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.